அனுப்பப்பட்டதாகவும் அங்கீகாரம் இந்த ஆண்டே கிடைத்துவிடும் என்றும் தெரிவித்திருக்கிருர்கள். எனவே அதை விரைவில் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அந்தச் சாலையை அரசு பராமரிப்பின்கீழ் எடுக்க ஆணையிடப்பட்டிருக்கிறது. அரசின் நிதிநிலையை ஆராய்ந்து அதைப் பற்றி எடுத்துக் கொள்வதா இல்லையா ? என்று யோசிக்கப்படும்.

வாலாஜா அணை.

*481 வின. திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாலாற்றின் அருகே உள்ள வாலாஜா அணையை விரிவுபடுத்திக் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சமீபத்தில் அந்த அணையைப் பார்த்தார்கள். அதைச் சீரமைக்கவில்லை என்று சொன்னாலும் எப்பொழுதோ தண்ணீர் வருகிறது, அந்தத் தண்ணீர் ஒரு பக்கத்தில் மேடாக இருப்பதால் காவேரிப்பாக்கம் போன்ற பகுதிகளுக்கு போய்விடுகிறது. ஆகவே வருகின்ற தண்ணீரை அரசாங்கம் அனுமதிக்கும் வகையில் காவேரிப்பாக்கத்திற்குப் போகும் தண்ணீர் காவேரிப்பாக்கத்திற்கும், கலவை போன்ற பகுதிகளுக்குச் செல்லவேண்டிய தண்ணீர் அங்கேயும் முறையாகச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சமீபத்தில் நான் சென்று பார்த்தது உண்மை. அப்பொழுது மணல் மேடாக இருந்தது. ஆனால், ஒவ்வொரு ஊருக்கும் எவ்வளவு தண்ணீர் போகவேண்டுமென்று கணக்குப்பார்த்துத்தான் தடுக்கவேண்டும். அங்கத்தினர் அவர்கள் அதைப் பற்றி எழுதியனுப்பினல் ஆராயும்படி இலாக்காவைக் கேட்டுக்கொள்ளலாம்.

Production of ‘ Khus-Khus ’

* 482—*Q*. Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state —

(*a*) the places where “ Vettiver ” is produced in this State ;

(*b*) the steps taken to increase its production ; and

(*c*) the steps taken to examine its markets ?

1974 மார்ச் 18]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) தலைவரவர்களே, இது வெட்டிவேர் பற்றியது. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்திலும், தஞ்சை மாவட்டம் கொள்ளிடம் வட்டத்திலும், சேலம் மாவட்டம் ஏற்காடு மலையிலும், ஆனைமலை, நீலகிரி முதலிய இடங்களிலும் இது சாகுபடி செய்யப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) இல்லை.

திரு. எம். டென்னிஸ் : தலைவரவர்களே, இது "மெடிசனல் வால்யூ" கொண்டதாக இருக்கிறது. இது அதிகமாக எல்லா இடத்திலும் உற்பத்தி ஆவதில்லை. அதற்காக அரசு ஊக்கம் கொடுப்பதாகவும் இல்லை. ஆகவே, இன்டென்சிவ் முறையிலும், எக்ஸ்டென்சிவ் முறையிலும் இதை உற்பத்தி செய்ய அரசு திட்டம் வகுத்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, எந்த அடிப்படையில் பயிர்களுக்கு விவசாயத்துறை ஊக்கம் அளிக்கிறது என்ருல், விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு ஆண்டுக்கு வருவாய் அதிகமாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது இந்த வெட்டிவேர் சாகுபடி செய்வதில் அவ்வளவு வருவாய் உள்ளதாக இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே விளவங்கோடு வட்டத்தில் ஒரு ஏக்கருக்கு என்ன கிடைக்கிறது என்று சற்றுப் பார்த்து அனுப்பினல், நல்ல வருவாய் இருந்தால், இதையும் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இந்த வெட்டிவேர் சாகுபடிக்கு அரசாங்கம் எந்த எந்த வகையில் ஊக்கம் அளித்து வருகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, விடையில் (இ), (உ) இல்லை என்று சொல்லியிருக்கிறேன்.

ஏலக்காய் உற்பத்தி.

*483. வின. திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலக்காய் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே,

(அ) ஆம்.